# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ மார்கழி 1984 ★ இதழ் 108



## அபிவிருத்திக்கு அணிநடை

"நாடென்ப நாடா வளத்தது" என்ருல் அந்நாட்டிலுள்ளவர்கள் பிறநாடுகளை நாடிப் போகாமல் தம் நாட்டிலேயே தமக்கு வேண்டுவனவற்றை விளைவு செய்து நுகர்ந்து நிறைந்த வாழ்வு வாழ்வதேயாம். இத்தகைய மக்கள் முன்ஞெரு காலத்திலே தமிழ் நாட்டிலே பிறநாடு புகாமல் வாழ்ந்தமையால் அந்த இடம் "புகார்" என வழங்கியதும் உண்டு.

நம்மவர் தேயிலைப் பானம் பருகுவதை நாகரிகமெனக்கருதி, நம் நாட்டிலேயே விளைந்த கொழுந்தைக் கொதிநீரிலிட்டுப் பருகுவதற்குத் தானும் பிறேசிலில் சீனியையும், டென்மார்க்கின் பாலையும், சீனத்துக் கிண்ணத்தையும் பெருமைப் படுத்தியதும் உண்டு. உருளைக்கிழங்கு சைப்பிறசிலிருந்து வந்ததும், யுத்தகாலத்தில் அது கருவாடு போன்ற வற்றலாக இறக்குமதியாக, அதை நீரிலிட்டு ஊறவைத்துச் சமைத்து உண்டதும் உண்டு.

இன்று சுதந்திர நாட்டில் பராக்குப் பாராமல், பிறரை நாடாமல், நாமே நமக்குத் தேவையானவற்றை உற்பத்தி செய்தல் தலையாய அபிவிருத்திப் பாதையாகும். அபிவிருத்திப் பாதையில் நாம் நடக்கும்போது அணி நடை நடத்தல் என்பது எல்லோரும் சேர்ந்து ஒத்துதவி கூட்டுறவு முறையில் உழைத்தலாகும். நீரிறைக்கும் இயந்திரம் புகுவதற்கு முன் துலாவும் பட்டையும் வேலை செய்த காலத்தில், துலா மிதிப்பதற்கும், இறைப்பதற்கும், பாத்தி கட்டுவதற்கும் மூவர் அல்லது நால்வர் தேவைப்பட்ட வேளையில், அயலரவர் ஒருவர்க்கொருவர் ஒற்றுமையாக ஒத்துழைப்புச் செய்தமை இன்றைய உலகமறியாத ஒரு நாகரிகம்.

அந்த வகையிலே ஊரவர் ஒருமித்து ஆக்கபூர்வமான வழியில் ஊரையும் நாட்டையும் முன்னேற்றுவது ஒரு வழி. ஒவ்வொரு கிராமமும் இயன்றளவில் தன்னிறைவு காண முயற்சித்தல் அதன் பயனுகும்.



மரம் நடுகை ஏற்பாட்டிற்கமைய மல்லாகம் நீதிமன்ற வளவில் லயன்ஸ் கழகத்தாரால் ஒழுங்கு செய்யப்பட்ட மரம் நாட்டு விழாவில் தொழிலதிபர் சிவதர்மவள்ளல் க. கனகராசா அவர்களும் நீதிபதி திரு. விக்னேஸ்வரன் அவர்களும் பங்குபற்றினுர்கள்.

★ பெருந்தன்மை உள்ளவர் பரந்த நோக்கமுள்ளவர் ★

உ
சிவமயம்









## திருநாவுக்கரசுநாயனார் தேவாரம்

### திருவலஞ்சுழி திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

அலையார் புனற்கங்கை நங்கை காண
அம்பலத்தில் அருநட்டமாடிவேடந்
தொலையாத வென்றியார் நின்றியூரும்
நெடுங்களமும் மேவி விடையை மேல்கொண்
டிலையார் படைகையி லேந்தி யெங்கும்
இமையவரும் உமையவளும் இறைஞ்சி யேத்த
மலையார் திரளருவிப் பொன்னி சூழ்ந்த
வலஞ்சுழியே புக்கிடமா மருவி னாரே.

திருச்சிற்றம்பலம்

அம்பலத்தில் அருநட்டம் ஆடியருளிய வேளையில் சடை நெகிழ்ந்தபோது, அங்கே இடம்பெற்றிருந்த கங்கையை உமாதேவியார் காண, எண்ணமுடியாத வெற்றி மேம்பாடுடைய பிரானார்; நின்றியூர், நெடுங்களம் முதலாய திருப்பதிகளை மேவியவரும், இடப வாகனமூர்ந்து முத்தலைச் சூலமேந்தியவரும், உமாதேவியாரும் தேவர்களும் போற்றி வ்ணங்கும் வண்ணம் மலையில் நிறைந்த அருவியாய பொன்னி நதி சூழ்ந்த திருவலஞ்சுழி என்னும் திருத்தலத்திலே எழுந்தருளியுள்ளார்.

## தமிழில் வழங்கும் வடமொழிகள் சில

| | | |
|---|---|---|
| மூங்கை | — | ஊமை |
| மூடர் | — | அறிவில்லாதவர் |
| மூர்க்கன் | — | அறிவில்லாதவன் |
| மூர்ச்சை | — | அறிவு மயக்கம் |
| மூர்த்தி | — | கடவுள், வடிவம் |
| மூர்த்திகரம் | — | கடவுள்தன்மை |
| மூலதனம் | — | முதற்பொருள் |
| மேகம் | — | முகில் |
| மேடம் | — | ஆடு |
| மேதை | — | பேரறிவு |

## கல்வி

**கண் உடையர் என்பவர் கற்றோர் முகத்துஇரண்டு
புண் உடையர் கல்லா தவர்.**

தங்கள் முகத்திலே கண் உள்ளவர்கள் என்று கருதத் தக்கவர்கள் கல்வி கற்றவர்களேயாம். கல்வியறிவில்லாதவர்களுடைய முகத்திலே உள்ளவை இரண்டும் வெறும் புண்களேயாம்.

### Education


Only the learned are regarded to have eyes, on the other hand those without education are said to have two sores on their face.

## 1984 டிசெம்பர் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | சனி | — | நவமி நாள் முழுவதும் |
| 2 | ஞாயிறு | — | நவமி காலை 7-10 வரை |
| 4 | செவ்வாய் | — | ஏகாதசி விரதம் |
| 5 | புதன் | — | பிரதோஷ விரதம் |
| 6 | வியாழன் | — | திருக்கார்த்திகை விரதம்<br>குமாராலய தீபம் |
| 7 | வெள்ளி | — | விளக்கீடு சர்வாலய தீபம் |
| 8 | சனி | — | பூரணை விரதம் |
| 9 | ஞாயிறு | — | விநாயகர் விரதாரம்பம் |
| 14 | வெள்ளி | — | ஆறுமுகநாவலர் குருபூசை |
| 15 | சனி | — | அட்டமி பகல் 9-25 மேல் |
| 16 | ஞாயிறு | — | அட்டமி நவமி<br>தமிழ் மார்கழிப் பிறப்பு |
| 18 | செவ்வாய் | — | ஏகாதசி விரதம்<br>நாவலர் பிறந்த தினம் |
| 20 | வியாழன் | — | பிரதோஷ விரதம் |
| 22 | சனி | — | அமாவாசை விரதம் |
| 24 | திங்கள் | — | பொன்னாலை கொடி |
| 25 | செவ்வாய் | — | நத்தார் |
| 28 | வெள்ளி | — | விநாயகர் சஷ்டி<br>திருவெம்பாவை ஆரம்பம்<br>காரைநகர் சிவன் கொடி |
| 29 | சனி | — | இரவு – 10-30 அட்டமி |
| 30 | ஞாயிறு | — | அட்டமி நவமி |
| 31 | திங்கள் | — | நவமி இரவு 3-04 வரை |

மற்றவர்களிடம் உதவி கேட்டுப் போகும்போது தன் சுதந்திரத்தை விற்பது போலாகிறது.

— மகாத்மா காந்தி




# இந்திராகாந்தியின் இயல்பாற்றல்

பாரதப் பிரதமர் பிரியதர்சனி இந்திராகாந்தி அவர்களின் இயல்பாற்றல் எழுத்தாளர், வரலாற்றாசிரியர், அரசியல் விமர்சகர் பலருக்கும் புரியாத புதிராகவும் இருந்து வந்ததுண்டு.

அவர் தாளரிச் சிலம்பரற்றத் தளர் நடை நடந்த காலத்திலேயே மகாத்மா காந்தியடிகள் அவரைத் தடுத் தாட்கொண்டு தமது தீட்சையளித்து உபதேசஞ் செய்துள்ளார்.

பூட்டன், பேரன், தந்தை ஆகியமுப்பெரும் நேருப் பெரியார்களின் பாரம்பரிய பிறப்புரிமை நெறியாள்கை அவரிடம் வெகுவாகப் பதிந்திருந்தது.

பாரம்பரியச் சொத்துக்களும் வாழ்வும் வனப்பும் எல்லாம் பாரத நாட்டுக்கேயன்றிப் பரந்தவுலகிற்கே அர்ப்பணஞ் செய்து வந்த குடும்பம் அவர் குடும்பம்.

குலம் சுரக்கும் ஒழுக்கம் என்ற வகையில் அரசொழுக்கம் அவரிடம் தங்குதடையின்றி வந்தபோதிலும் அவர், தம்மை உருவாக்கிய பெருமை லால் பகதூர் சாஸ்திரிகளுக்கும் பண்டிதபாண்ற் அவர்களுக்கும் உரியதெனப் பலவிடங்களில் பகிரங்கமாகப் பேசியுள்ளார்.

தம்மை அரசியற் பணிக்கு ஆளாக்கிவிட்ட இவரிருவரும் தாம் தளர்ந்தபோதெல்லாம் தைரியமூட்டி முன்னேறச் செய்தனர் என்று நன்றியறிதலோடு நவின்றுள்ளார்.

தாம் என்றும் தேச சேவகி என்று பெருமையோடு பேசி வந்த அவருக்குச் தேசாபிமானமும் திடசித்த ஞானமும் சேவைக்குரிய ஆற்றலும் இயல்பாயமைந்திருந்தன.

இராமாயணத்தில் இராமன் இரண்டு நாடுகளில் பெருவெற்றியடைந்தவன். கிஷ்கிந்தையை வென்றதும் அதனை அவன் அயோத்தியுடன் இணைத்திருக்கலாம். இராவணனின் பூமியை வென்றதும் அதனை அயோத்தியோடு இணைத்திருக்கலாம். ஆனால் அவன் செய்த பரிபாலனம் அந்த அந்த நாட்டுக்குரிய அடுத்தவரை அரசராக்கியதாகும்.

கிழக்குப் பாகிஸ்தான் எனநிலவிய நாடு வங்காளதேசமாகப் பெயர் மாறியபோது கைமாறக் கூடிய சந்தர்ப்பமும் சூழ்நிலையும் சாதகமாயிருந்தும் அதனை அந்த நாட்டவரிடமே ஒப்படைத்தவர்.

திருக்கைலாச மலையை அசைத்தவனைச் சிவபெருமான் மன்னித்தருளி வாழ்நாளும் வாட்பலமும் கொடுத்தருளியவர். அந்தவகையில் மன்னிக்கும், மறந்துவிடும் மனப்பான்மை இந்திராவுக்குப் பூஷணமாயிருந்தது.

தேர்தல்கள் நிறைவேறியதும் அபிப்பிராய பேதங்களை அடியோடு மறந்துவிடுதல் வேண்டும் என்பது இந்திராவின் அசைக்க முடியாத மனிதாபிமான மனோதர்மம்.

கூட்டுச்சேரா நாடுகளோடு தோள் கொடுத்து வல்லரசுகளின் கெடுபிடிகளுக்கு வகை காணவல்ல வீராங்கனையைப் பாதுகாத்த வேலியே மேய்ந்து விட்டமை விதிவசந்தானே.

# நோர்வே நாட்டில் இந்துமதம்

வேதகாலத்து நாகரிகத்தை உருவாக்கியவர்களும் தம்மை ஆரியர்கள் எனக்கருதியவருமான மக்கள் தங்கள் நாகரிகத்தைக் கடல் கடந்த தேசங்களிலும் பரவும்வகை செய்தல் வேண்டும் எனப் பெருமுயற்சி எடுத்தார்கள். அவர்கள் எவ்வித வன்செயல்களிலும் ஈடுபடாமல் வணிகர் மூலம் தங்கள் நாகரிகத்தை அயல் நாடுகளில் பரப்பினார்கள். அயல் நாடுகளில் மாத்திரமன்றி மிகத் தொலைவிலுள்ள நோர்வே நாட்டிலும் தம் நாகரிகத்தைப் பரப்பினர் என்பது பேராசிரியர் நில்சனின் கருத்து. அதை வரலாற்றுக்கு எட்டாதகாலம் என்னும் நூலில் எழுதியுள்ளார்.

வேதகாலத்தில் பயிர்த்தொழில் நல்ல முறையில் நடைபெற்றது. நிலம் தான் செல்வத்துக்கும் பாதுகாப்புக்கும் காரணம் என அக்காலத்தவர் கருதினர். சமுதாய முன்னேற்றத்துக்கு அச்சாணி போன்றது பயிர்த்தொழில் என நம்பினார். ஆடு மாடுகளை வளர்த்தும், தமது வாழ்வுக்கு வேண்டியவை எல்லாவற்றையும் தாமே உண்டாக்கினார்கள். பசுக்களைப் பொன்னைப் போலப் போற்றிய சுலோகங்கள் பல வேதங்களில் உள்ளன. பசு கோமாதா. பிள்ளைகளுக்குப் பால் சுரந்த பசுமாட்டிறைச்சியை உண்பது பாவம். அன்பு அன்பு என்று சொல்லிக்கொண்டு அதனை உண்பவர்களைத் தடுப்பது சிரமம். மனமிரங்கியாயினும் பசுவைக் கொல்லாதீர் எனக்கேட்போம்.

# தமிழ்ப்பண்பாடும் சைவசித்தாந்தமும்

பழைய கருத்து என்றாலும் புதிய முறையிலிருந்து செய்தவர் மலேசிய வைத்திய காலநிதி விசுவலிங்கம் அவர்கள். இப்பெரியார் குவாலாலம்பூரில் சைவ சித்தாந்த சங்கந்தாபித்த பெருமகனாவர். இவர் அகிலம் முழுவதும் அறிந்து கொள்ளும்வகையில் ஆங்கிலத்தில் சொன்னவற்றை அழகு தமிழில் சைவசித்தாந்த மாணவன் என்னும் மகுடத்தில் மறைந்து நிற்கும் அறிஞர் அருமையாக மொழிபெயர்க்கக் கொமேர்சல் அச்சகம் அழகாக அச்சேற்றியுள்ளது. பதினொரு பக்கத்துச் சிறு நூலாயினும் காரம் அதிகமாயுள்ளது.

★ பக்தனுக்குப் பிரபஞ்சமும் இறைவனும் ஒன்றே ★

## அபிவிருத்திப் பாதையிலே

அபிவிருத்திப் பாதையிலே குடிசைக் கைத்தொழில்கள் யாவும் அணிநடை நடத்தல் வேண்டும். இலங்கையர் பலர் கிராம வாழ்க்கையையே பெரிதும் விரும்பித் தமக்குத் தேவையானவற்றைத் தாமே செய்துகொள்ளும் சாமர்த்தியம்வாய்ந்தவர்களாக இருந்துவந்துள்ளனர். குடிசைத் தொழில் கைத்தொழிலின் குழந்தைப் பருவம். மர வேலை, சிற்ப வேலை, இரும்பு வேலை, செம்பு வேலை, பொன் வேலை, ஓவியக் கலை முதலியன கிராமங்கள் தோறும் திறமையாக நடைபெற்றன.

ஓடுகள், மட்பாண்டங்கள், செங்கற்கள், பொம்மைகள் யாவும் மண்கொண்டு செய்த நிபுணர் அக்காலத்தில் இருந்தார்கள். இருபாலை, சங்கானை, வண்ணார் பண்ணை முதலிய இடங்களில் மட்பாண்ட வேலைகள் நடைபெற்றன. இன்றும் மட்பாண்ட வேலைக்கேற்ற களிமண் குளங்கள்தோறும் படைபடையாய்க் கிடக்கிறது.

நீர்வேலியில் இரும்பு வேலை புதுப் பொலிவு பெற்ற வேளையில், வதிரி சப்பாத்து, செருப்பு வேலைகளில் உலகப் புகழ் பெறுவதாயிற்று. பிறநாட்டவர் பலர் வதிரிக் காலணிகளைக் கையால் தடவி நல்லது என்று கூறுகிறார்கள்.

குடிசைத் தொழிலால் உண்டாகும் நன்மைகள் பல. வேலையின்மை போகிறது. நாமே நமக்கு உதவியாகிறோம். பாரம்பரியக் கலைகளை அபிவிருத்தி செய்கிறோம். இறக்குமதியை நம்பியிருக்கத் தேவையில்லாதுபோகிறது. எங்கள் பணம் எங்கள் நாட்டிலேயே சுழல்கிறது.

மர வேலை, கைத்தறி வேலை, சாயம் பூசுதல், உடுப்புத் தைத்தல், கயிறு திரித்தல், பாயிழைத்தல், எண்ணெய் ஊற்றுதல் யாவும் நல்ல வருமானந் தரும் குடிசைத் தொழில்களாகும்.

மக்கள் வங்கி இவற்றுக்கெல்லாம் வசதியும் உதவியும் ஊக்குவிப்புந் தருகிறது. பண வசதி, இயந்திர வசதி, மூலப்பொருள் வசதி, பயிற்சி வசதி, விற்பனை வசதி எல்லாம் கிடைக்கின்றன.

## பாரதியாரின் வேதஞானம்

பாரதியார் பிறப்பால் பிராமணன். அவருக்கு இளமையிலேயே சமஸ்கிருதமொழியறிவு போதியளவு இருந்தது. அவர் வாரணாசி என்னும் காசியில் கங்கைக்கரையில் விசுவநாதர் ஆலய பிராகாரங்களில் அந்தணர்கள், பண்டாக்கள் அட்சரசுத்தியோடு வேதமோதக் கேட்டு மகிழ்ந்தவர்.

வடக்கில் ஒலித்த வேதத்தைத் தெற்கிலிருந்தவாறே கருவிகள் மூலம் கேட்கவேண்டும், அதற்கான கருவிகள் செய்தல் வேண்டும் என்று கருத்துள்ள பாடல்கள் பாடியவர். வேதசூக்தங்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்தவர். அக்னியும் இதரபாடல்களும் (Agni and other poems) என அவர் பாடியிருந்தார்.

பாரதியார் வேதசிரசு என்னும் உபநிடதங்களையும் உரிய முறையில் மொழிபெயர்த்திருந்தார். வேதமொழிபெயர்ப்புகளில் பாரதியார் விஞ்ஞான நுட்பங்களையும் தெளிவாகக் காட்டியுள்ளார்.

## இந்திராவும் இருபது அம்சமும்

பயறு பருப்புவகைகள் எண்ணெய் வித்துக்களின் விளைவை அதிகரித்தல். கிராமமுன்னேற்றப் பாதையில் ஒன்றிணைதல், மிதமிஞ்சிய நிலங்களில் ஏழைகளுக்கும் பங்கீடு செய்தல் விவசாய தொழிலாளருக்கு மதிப்பான கூலி வழங்கல், தொழிலாளருக்குக் குடியிருப்பு வசதி செய்தல், நல்லநீர் குடிநீர் வழங்குதல், வீடமைப்பு மூலம் வீடில்லாதவர்களுக்கு உறைவிடங்கள் வழங்கல், சேரிகளைத் தூய்மையாக்கிச் சுற்றுடல் பாதுகாப்பளித்தல். கிராமங்களுக்கும் மின்சார வசதி வழங்கல் நல்ல முறையில் காடுவளர்த்தல், மரஞ்செடி கொடி நாட்டுதல் குடும்பக்கட்டுப்பாடு இயன்றளவு இஷ்டம்போல் நடைமுறைப்படுத்தல், நவீன முறைகளில் சுகாதார வசதியில், தொழுநோய், புற்றுநோய் முதலியன நீக்குதல், கண் பார்வை வழங்கப் பெருமுயற்சியெடுத்தல். மாதர் நலன், சிறுவர் நலன், மகப்பேற்று மருத்துவ வசதி, மலை நாட்டவர் வாழ்வு வசதி செய்தல், அனைவருக்கும் கட்டாயமாக 6 – 14 வயதுக் காலத்தில் கல்வியூட்டல், சிறுமியர் கல்வியில் கூடிய கவனமெடுத்தல், முதியவர் கல்வியில் முயற்சி அதிகரித்தல், நாளாந்த தேவைப் பொருள்களை மக்களுக்கு நாணயமான கடைகளில் விற்பனை செய்தல், நடமாடும் கடைகள் மூலம் கடைகளில்லாத இடங்களில் பரவலாக நிதான விலையில் விற்றல். பாடசாலைப் பிள்ளைகளுக்கான உபகரணங்கள் வசதியாகக் கிடைக்க வழி வகுத்தல், அவர்களுக்கு உணவு, உறைவிட வசதிகளையும் வேண்டியாங்கு விசாலித்தல், கைத்தொழில் வளத்தை ஊக்கமளித்து வளர்த்தலோடு குடிசைத் தொழில், கைத்தறி நெசவுவிருத்தி, கைவினை முதலியவற்றையும் வளர்த்து நவீனமுறையில் உற்பத்திகளைப் பெருக்குதல். இருட்டுச்சந்தை, கள்ளக் கடத்தல், இரகசிய பதுக்கல், இரட்டிப்பு விலை, வரி தவிர்த்தல் முதலிய குற்றங்களைக் கண்டு நடபடிக்கையெடுத்தல் மக்களின் அறிவாற்றல்களை நேர்ப்படுத்தி, வேலைவாய்ப்புகள் வழங்கி, திறமைக்கு மதிப்புக்கொடுத்து, உள்ளூர் மூலவளத்தை இயன்றளவு பயன் படுத்திப் பயன்பெற வாய்ப்பளித்தல்.

## இயலும்: இயலாது.


பாம்பு கடித்தால் அதுவும் மீட்கவல்லோம்
பசாசு அறைந்தால் நீறிட்டுப் பார்க்கவல்லோம்
வேம்பு கசப்பறக் கறியும் ஆக்கவல்லோம்
விறல் வேழத் திதிகமதம் தணிக்கவல்லோம்
சாம்பொழுது திடமாகப் பேசவல்லோம்
தரணியின் மேற் கல்லாதது ஒன்றுமில்லை
திம்பரைநல் லவராக்கிக் குணமுண்டாக்கத்
திறமதறி யாமல் நின்று திகைக்கின்றோமே.

தந்தவர்: **தத்துவப்பிரகாசர்**

ஓர் இலட்சியத்தைக் கடைப்பிடியாது வாழ்பவன், சுக்கானில்லாத கப்பலுக்கு நிகராவான்.

— மகாத்மா காந்தி

★ நன்மை செய்யாதவனிடம் ஆண்மையிராது ★



## பஞ்சதந்திரம்

கெட்டகாலம் வரும்பொழுது நல்லகாலத்தை எதிர் நோக்கியபடியே புத்திசாலி தனது நெஞ்சத்தைக் கடின மாக்கிக்கொண்டு தன் காரியத்தைச் செய்து திரவேண்டும்.

அறிவும் உசார் உணர்ச்சியும் உற்சாகமும் உள்ளவன் வெற்றி பெறவேண்டுமென்றால், தன் நடபடிக்கைகளில் எச்சிரிக்கையாக இருந்துகொண்டு, தன் கௌரவத்தையும் அடக்கிக்கொண்டு நல்லகாலத்தை எதிர்நோக்கி இருத்தல் வேண்டும்.

இந்திரன், குபேரன், யமன் ஆகியோருக்குச் சமமாகத் தன் சகோதரர்களால் பூசிக்கப்பெற்ற தருமபுத்திரன், ஒரு யாத்திரிகனின் கோலைப்பற்றிக்கொண்டு வெகுகாலம் துன்பப்படவில்லையா?

காண்டீபம் என்னும் வில்லை நாணேற்றி மீட்டுவதால் கை காய்த்துப்போன அருச்சுனன் நடனமாடி தன் மேகலை மணிகள் ஒலிப்பதைக் கேட்கவில்லையா?

அழகும் வலிமையும் வாய்ந்த இரட்டையர்களான நகுல சகாதேவர்கள் விராட மன்னனிடம் வேலையாள்க ளாக அமர்ந்து மாடுகளை எண்ணிக் கணக்குப்பார்ப்பதில் ஈடுபட்டு வாழவில்லையா?

உயர்குலத்தில் உதித்தவள், இணையற்ற அழகும் இளமையும் பெற்று இலட்சுமி போன்ற ஒளிபொருந்திய வளான திரௌபதி மத்ஸ்ய அரசனின் அரண்மனையிலே கர்வங்கொண்ட பெண்களால் ஸைரந்தரி (அடிமை) என்று அழைக்கப்பட்டுச் சந்தனத்தைப் பொடிபண்ணிக் கொண்டிருக்கவில்லையா?

## மந்திரங்கள் காப்பவை

இராம லட்சுமணர் வனவாசஞ் செய்த காலத்தில் மந்திரங்கள் அவர்களைக் காத்தன. மாய மானைத் தொடர்ந்து இராமர் போனபோது, அவரைத் தேடிச் சென்ற இலட்சுமணன் பர்ணசாலையின் முன்புறத்தில் கோடு கீறி அதனைத் தாண்டிப் போகவேண்டாம் என்று சீதைக்குச் சொன்னான். அவள் கோட்டுக்குள் நின்றிருந் தால் இராவணனால் ஒன்றுஞ் செய்திருக்கமுடியாது. அவன் பிச்சை கேட்டு வெளியே நின்றபோது, சீதை மனமிரங்கி எடுத்தடி வைத்ததும் இராவணனுக்கு வாய்ப்பாயிற்று.

## கந்தரனுபூதி சொன்னவருக்கு புகழுரை, பூமாலை, பொன்னுடை

தமிழ்நாட்டில் தருமபுரவாதீனத்துக் கலைக் கல்லூரி யில் உருவான திருவாட்டி வசந்தா வைத்தியநாதப் பெருமாட்டி நல்லையாதீனத்தில் என்றும் புரிந்து வரும் நற்பணியின் சிகரம்போலமைவது அன்னார் கந்த சஷ்டி விழாக்களில் விரிவுரையாற்றுவது. இம்முறை அம்மையார் கந்தரனுபூதி பேசிய வைபவத்தில் மில்க்வைற் தொழி லதிபர் வசனலங்காரமாக வாசோபசாரம் சொல்ல, அவரின் பாரியார் நாகம்மையார் வசந்தா அவர்களுக்குப் பொன்னுடை போர்த்துப் பூமாலை சூட்டிச் சிறப்பித்தார்.

முன் தொடர்ச்சி:-

## தொகையகராதி

### எல்லாம் நான்கு

**1. படைச் சிறப்பு**

| | |
|---|---|
| பெருமை | நல்லொழுக்கம் |
| வீரம் | நம்பிக்கை |

**2. பண்**

| | |
|---|---|
| பாலை | மருதம் |
| குறிஞ்சி | செவ்வழி |

**3. பதவி**

| | |
|---|---|
| சாலோகம் | சாரூபம் |
| சாமீபம் | சாயுச்சியம் |

**4. பரிசம்**

| | |
|---|---|
| சீதம் | மிருது |
| உஷ்ணம் | கடினம் |

**5. பெண் பருவம்**

| | |
|---|---|
| பால | பிரவிடை |
| தருணி | விருத்தை |

**6. பாவினம்**

| | |
|---|---|
| வெண்பா | கலிப்பா |
| ஆசிரியப்பா | வஞ்சிப்பா |

**7. பிரமாணங்கள்**

| | |
|---|---|
| பிரத்தியட்சம் | உவமானம் |
| அநுமானம் | சத்தம் |

## எங்கள் சமயம்

இந்து தர்மம் என்றுமுள்ளதாகையால் சனாதன தர் மம் எனப் பெயர் பெற்றது. அதன் வரலாற்றில் காலந் தோறும் உண்டான பல குழப்பங்களுக்கு இடையிற்கூட இந்து மதம் இந்நாள்வரை நிலைத்திருக்கிறது. அது எவ் வித வீழ்ச்சியும் அடையவில்லை. அதன் கிளைகளாகவுள்ள மற்ற மதங்களையும் ஒன்று சேர்க்கக்கூடிய ஏதோ ஒரு உயிர்த் தன்மை அதற்குண்டு. அதனருமையை ஐரோப் பியர் நன்கறிந்து பெருநூல்கள் எழுதி வருகிறார்கள்.

★ இன்று ஆத்மீக சக்தி அவசியம் வேண்டும் ★

## யோகாசனம்

"அகிலத்தின் முதலாசிரியரும், உலகுக்கு நன்மையைச் செய்பவரும், உலகினருக்குப் பேரின்பத்தை நல்குபவரும் யோகியருள் யோகியருமான உமக்கு வணக்கம்".

யோகாசனத்தால் மனம் நல்லவழியில் வளம்பெற்று உடலை நல்வழியில் நடத்துகிறது. உடம்பை நல்வழிப் படுத்தினாலன்றி, மனம் இறைவனை நல்ல வழியில் நினைக்க மாட்டாது. உடம்பு சொல்வழி கேட்பதற்கு யோகாப் பியாசம் அவசியமானது.

இன்று யோகாசனம் ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் வெகுவாகப் பரவிவருகிறது. மனச் சாந்தி பெறுவதற்கும் உடல் வலுப் பெறுவதற்கும் பலர் யோகாசனம் பழகிப் பூரண வெற்றி பெற்றுள்ளார்கள். அமெரிக்க மாந்தரும் மாதரும் இந்துசமயப் பெயர்களைப் புனைந்து இந்துப் பண்பாட்டைப் பின்பற்றுகிறார்கள். அங்கே நகரங்கள் தோறும் யோகாசன மண்டபங்கள் அமைக்கப் பெற்றுள்ளன.

யோகாசனம் ஆரோக்கியந் தருவதோடு, ஆசனம் பழகுவதற்கு முன் உண்டான பலவித நோய்களையும் நீக்குகிறது. மருந்துகள் நோய்களை மாற்றுகின்றன. யோகாசனம் நோய்களை நீக்குகின்றன. யோகாசனத்தால் உடம்பும் உள்ளமும் தூய்மை பெறுகின்றன.

யோகாசன முறையைப் பாரத நாட்டுப் பழம்பெரு ஞானிகள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கண்டு பழகிப் பயன் பெற்றுவந்தனர். யோகக்கலையில் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணம், தியானம் சமாதி என்பன படிக்கிரமத்தில் அமைந்துள்ளன. இவை எட்டுப்படிகளான காரணத்தால் அட்டாங்க யோகம் எனப்பெயர் வழங்குகின்றது.

இவற்றை எல்லோருக்கும் விளங்கக் கூறின் இயமம் என்பது தன்னடக்கம். நியமம் என்பது சமய அநுட்டானம். ஆசனம் என்பது இருக்கை. பிராணாயாமம் என்பது சுவாசத்தை ஒழுங்கு செய்தல். பிரத்தியாகாரம் என்பது புலன்களைப் பிரித்தல். தாரணை என்பது ஏகாக் கிரகசித்தம். தியானம், சமாதி என்பன பெரிய நிலை.

### யோகத்துக்கு அடிப்படை

மனம், வாக்கு, காயம் என்னும் முக்கரணங்களினாலும் அகிம்சை, சத்தியம், கள்ளாமை, பிரமச்சரியம், பிறர் உடைமைக்கு ஆசைப்படாமை இவற்றை அநுசரித்தல்.

### நியமம்

உள்ளும் புறமும் தூய்மை, மகிழ்ச்சி, தவம், நல்ல நூல்களைப்படித்தல், மந்திரங்களை நினைத்தல், இறைவனை வழிபடல் என்பன நியமம் எனப்படும்.

### ஏணிப்படி

பொறுமையையும், பகைமையையும் நீக்கினால் மனச் சாந்தியடையலாம். சரியானபடி வாழ்தல், சரியான படி சிந்தித்தல், பேசுதல், நடத்தல் நல்லொழுக்கமாகும். சிந்தனைகளை அடக்கி, மனத்தை ஒழுங்குபடுத்தி, தியானஞ் செய்து சுகத்தையும் சுதந்திரத்தையும் பெறலாம். யோகாசனம் எல்லோருக்கும் ஏற்றது.



## Bhagavan Buddha Said:-

As a mother guards her only son with her own life, so do thou guard all creatures with thy immeasurable loving thought.

Above thee, below thee, on all sides of thee, guard thou the creatures with thy sympathy and love.

See, that thy thought is ever free from any wish to injure free from enmity, free from self-fishness.

## புத்தபகவானின் அஸ்தி

என்றோ எப்பவோ மறைந்த மகானான புத்தரின் அஸ்தி ஆங்கொரு கோபுரத்தில் வெண்கலப் பாத்திரத்தில் இருக்கிறது என்று சீனதேயத்துப் பிக்கு ஒருவர் தகவல் தெரிவித்தார். அதன்படி 1910 ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கம் ஆய்ந்தபோது அங்கே நான்கு எலும்புத்துண்டுகளும் கொஞ்சம் சாம்பலும் இருந்தன. அவற்றை சீனா, யப்பான், பர்மா, இலங்கை ஆகிய நான்கு நாடுகளுக்கும் பகிர்ந்தளிக்க அரசாங்கம் தீர்மானித்தது.

## ஒரு நாளில் இருபெரும் பணி

சென்ற 18-11-84 ஞாயிறு வாரம் அளவெட்டியூரில் சுவாமி சுப்பிரமுனியா ஆரம்பித்த மடத்தில் யோகாசன வகுப்பும், சமயபாட வகுப்பும் வழக்கம்போல நடைபெற்ற வேளையில் பலவித மரக் கன்றுகளுடனும் பிரசுரங்கள், வெளியீடுகளுடனும் அங்கே சென்ற மில்க்வைற் தொழிலதிபர் யோகாசனத்தின் மகிமை பற்றியும், சமய வாழ்வின் சிறப்புப்பற்றியும், மரம் நாட்டும் பணியின் பயன் பற்றியும் மூன்று உரைகள் நிகழ்த்தி வந்திருந்தவர்களுக்கெல்லாம் மரக்கன்றுகளையும், வெளியீடுகளையும் விநியோகித்தார்.

நண்பகல் மப்பும் மந்தாரமுமாய் இருந்தவேளையில் நல்லூருக்கும் இருபாலைக்கும் இடைப்பட்ட கட்டைப் பிராயூரில் கோயில் கொண்டருளியுள்ள மனோன் மணியம்மன் ஆலயச்சூழலில், நல்லூர்த் திருவிழா வேளையில் மகத்தான பணிபுரிந்த சைவத்தொண்டர்களான இளைஞர்கள் செய்த சிரமதான வேலைகளில் தொழிலதிபரும் தோள்கொடுத்து மண்வெட்டி பிடித்துப் பூடுகள் களைந்து அம்மன் கோயில் வெளிப் பிராகாரத்தைச் செப்பனிடுவதில் பங்குபற்றிப் பாராட்டுப்பெற்றார்.

## இந்திரன்

இந்திரன் என்பது விஞ்ஞான சக்தி. இந்திரன் அஞ்ஞானத்தை விரட்டியவன். அஞ்ஞானத்தை விருத்திரன் என்பர். விருத்திரன் இருள்மயமாகி எல்லாவற்றையும் மறைத்தவன். விருத்திரனின் தாய் தாநு நம்மை நல்லனவற்றிலிருந்து பிரித்து வைத்தவள்.

★ இறைவனே எமக்கு என்றும் தளபதி ★

## உங்களுக்குத் தெரியுமா?

(விடைகள் வேறிடத்தில்)

1. மேடு பள்ளமான நிலத்தைச் சமப்படுத்தும் இயந்திரம்?
2. உலகில் அதிக தங்கமுள்ள நாடு?
3. பிரேசில் நாட்டின் உத்தியோக மொழி?
4. உரோமரின் தேவ சேனுபதி?
5. உரோமரின் கடல் தெய்வம்?
6. யூயிட்சூ என்னும் பாதுகாப்புப் பயிற்சி?
7. யப்பானியரின் பிரதான உணவுத்தானியம்?
8. பிரான்ஸ் நாட்டின் அடிப்படை நாணகம்?
9. ஜேர்மனியின் அடிப்படை நாணகம்?
10. பழைய பினிசியா பிரதேசம்?
11. சீனுவின் பழைய பெயர்?
12. யப்பானின் சொந்தப் பெயர்?
13. சுவீடின் நாட்டின் தலைநகரம்?
14. கிறீன்லாந்து தேசத்தின் உரிமையாளர்?
15. றைன்நதி கலக்கும் கடல்?
16. விசூவியஸ் என்னும் எரிமலையுள்ள நாடு?
17. ஒலிம்பஸ் மலையுள்ள நாடு?
18. கடலில் அலைமோதக் காரணம்?
19. விண்கலம் உலகத்தை வலம்வரும் நேரம்?
20. சுவீடின் தேசத்து நாடாளுமன்றத்தின் பெயர்?

## ஆர்வமும் அதிஷ்டமும்

யாழ்ப்பாணத்து சைவத் தமிழ்ப் பண்ணைகளுள் ஒன்ருய் அளவெட்டியூருக்குப் பிள்ளையாரின் பெருங்கருணை நன்ருக நீர்பாய்ச்சிவருகின்றது. சைவமும் தமிழும் நன்ருகவளர்கின்றன. சைவம் வளர்த்த சான்ருேர்களும் தமிழ்வளர்த்த செம்மல்களும் அங்கே நெருக்கமாக வாழ்ந்தனர்.

இன்று தர்மம் தழைக்கும் ஊர்களுள் அளவெட்டியூரும் ஒன்று. ஆண்டுதோறும் அன்னதானம், சொர்ண தானம், வஸ்திரதானம் செய்துவந்த மலேசியா அன்பர் சின்னப்பு அவர்களுக்குத் தாம் செய்து வந்த தானத்தில் மேலும் ஆர்வம்பொங்கத் தொடங்கியுள்ளது. பொங்கிய ஆர்வம் 1985 வருடப்பிறப்பன்று மேலும் பலருக்கு அதிஷ்டத்தை அகலித்துள்ளது. இதனுல் அவ்வூரின் ஆண்கள் நூற்றுவருக்கும், பெண்கள் நூற்றுவருக்கும் பச்சைப்படியாக அரிசியும், புதுவேட்டி அல்லது சேலையும், உரொக்கப் பணமும் கிடைக்கப் பிள்ளையார் அருள்பாலிக்க சின்னப்பு அவர்களுக்கு ஆர்வம் பொங்கியுள்ளது. மூத்தபிள்ளையார் மூவகைத்தானம் வழங்குகின்ருர். ஆதரவற்றவர் சேர முந்துங்கள். அறம் வளர்க! அடியார்கள் வாழ்க!!

## எண்பத்துநான்கே போ போ

நாங்கள் உன் மூத்த சகோதரன் எண்பத்துமூன்றில் பட்டபாட்டை எழுதப் பட்டோலை கொள்ளாது. அவனுக்குப் பிரியாவிடை கொடுத்து, உன்னைக் குதூகலமாக அன்று வரவேற்ருேம். நீ ஏதாவது நன்மை செய்வாய் என்று கருதினேம். சோழம் பொரி வறுபட்ட ஓட்டின் சூடு தாங்கமுடியாது நெருப்பில் விழுந்தமாதிரி நாங்கள் உன்னிடம் விழுந்தோம். நீயோ ஒரு நாள் வயதெல்லை கூடியவன் என்பதாலும், பாம்பின் குட்டி பாம்புதான் என்பதாலும் பகரமுடியாத அளவில் பகாசுரனையும் விஞ்சி வேலைபார்த்து வேரோடு சாய்த்துவிட்டாய். எத்தனை இளம் பஞ்சபாண்டவர்களை ஏப்பம் விட்டாயோ இறைவா அதற்குக் கணக்குத் தெரியாது. எத்தனை கோடி மக்களின் இதயராணி இந்திரா உனக்கு என்ன செய்தவள்? நீ அவளுக்கு என்ன செய்தாய். அவள் ஒருத்தி என்று நீ நினைத்தாய்போலும். கூட்டுச் சேரா நாடுகளின் தொகையும், அங்கெல்லாம் வாழும் மக்கள் தொகையும், பொதுநலவாய நாடுகளின் தொகையிலும், அவற்றின் மக்களின் தொகையிலும் மிகவதிகமானவையன்ருே. உலகில் மிகவதிகமான மக்களின் அன்புக்குப் பாத்திரமாகி அன்னை என உலக மக்களால் அன்பு நேசத்தோடு அழைக்கப்பெற்ற இந்திராவையும் விழுங்கிவிட்டாயே. உனக்கு முந்திய 1884, 1784, 1684, 1584, 1484 ஆகிய ஆண்டுகள் ஆக்கபூர்வமாக வரலாறு படைத்த வழியில் நீ அழித்தலதிகாரத்தில் அல்லோல கல்லோலப்படுத்திஞயே. உனக்கு அறம் என்ருல் என்ன என்று தெரியுமா? எத்தனை மக்களுக்கு அகால மரணம் வருவித்த நீ காலக் கணிப்பில் ஒரு ஆண்டா. பிணந்தின்ற பேயே போ போ. செத்தைக்குள் பத்தைக்குள் நில்லாதே போ போ.

### வறுமைப் பிடியிலிருந்து செல்வப் பெருக்கம் அடைவதற்கு

## ஒன்றிணைந்த கிராமாபிவிருத்தி

முதியவர் கல்விக் கண் திறத்தல்
படிப்பறிவின் பின் படிக்கும் வசதி
சமூக பொருளாதார மதிப்பீடு
விவசாய விரிவாக்கப் பணி
கால்நடை அபிவிருத்தி
பாற்பண்ணை கோழிப்பண்ணை வளர்ப்பு
குடிசைக் கைத்தொழில் அபிவிருத்தி
மாதர் கைப்பணி தையல் வேலைப் பயிற்சி
குழந்தைகளுக்கு விளையாட்டு வசதி
ஆசிரியர்களுக்கான சேவைப் பயிற்சி
திட்டமிடல் வேலைவாய்ப்பு ஆய்வு
சுகாதாரப் பணிமனை
மரம் செடி கொடி நடும் பணி
வீட்டுத் தோட்டம் விளைபொருள் விருத்தி
வரண்ட பகுதிகளில் குளங்களை ஆழமாக்குதல்
ஓய்வு நேர உபயோகத்துக்கு வழி வசதி

★ மனத்தூய்மையே என்றும் சாந்தி தருகிறது ★

## சைவசமய தீட்சைப்பேறு

சென்ற ஐப்பசி மாதத்தில் அதிலும் கடைசி வெள்ளி நாளில் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் சைவக் குருமார்கள் பலர் கோயில்களிலும் பாடசாலை மண்டபங்களிலும் ஹோமஞ் செய்து நூற்றுக்கணக்கானோருக்குச் சிவதீட்சை வைத்தார்கள்.

சந்தர்ப்பம் சூழ்நிலையை அநுசரித்து, மில்க்வைற் தொழிலதிபர் ஆங்காங்கே சென்று, அழகிய நடராசர் படம், நித்திய கருமவிதி, திருநீற்றுப் பதிகம், திருநீற்றுப் பொட்டலம் ஆகியவை அன்பளிப்புச் செய்து, சிவ தீட்சையின் மகத்துவம் பற்றிப் பேசியும் சேவை செய்தார்.

## பனம் விதைகள் பல்லாயிரம் கொண்டதும் கொடுத்ததும்

பனையபிவிருத்தியில் பல்லாண்டுகளாகப் பரவலாகப் பெரும் பணிபுரிந்து வருகின்ற மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா அவர்கள் இவ்வாண்டிலும் பல்லாயிரம் பனம் விதைகள் சேகரித்துக் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களின் பிரதேசங்கள் எங்கும் விநியோகம் செய்துள்ளார்.

இம்முறை விளையாட்டுக் கழகங்கள் சில வழக்கமாக விரும்பிப் பெறும் பந்துகளை விடுத்து, பாட்மிங்ரன், ரெனிஸ் முதலான விளையாட்டு உபகரணங்களை முன் கூட்டியே விரும்பியறிவித்துப் பெற்றுத் திருப்தியடைந்துள்ளார்கள்.

## மரம் நாட்டுவிழாவில் மாதர் பங்கு

இவ்வாண்டு மரம் நாட்டுவிழாவில் மருதனார்மடம் என வழங்கும் இராமநாதன் கல்லூரி அதிபர், ஆசிரியைகள், மாணக்கியர் மதிப்பீடு செய்யமுடியாத அளவில் பெருமளவில் கல்லூரி வளவில் மரங்கள் நாட்டியுள்ளார்கள். அவர்களுக்கு மரஞ்செடி கொடிகள் நாட்டுவதின் மாண்பைப் பற்றி மில்க்வைற் தொழிலதிபர் பேசியதோடு, பேச்சளவில் நில்லாமல், செயலில் இறங்கித் தாமே பலவிடங்களில் மரங்களை நாட்டியதோடு, பலவித மரக் கன்றுகளை உபகரித்தும் பணிபுரிந்தார்.

## கந்த சஷ்டி விழா

முருகப் பெருமானுக்குரிய தலையாய விரதமாகிய கந்த சஷ்டி பெருவிழாப் பொலிவோடு நல்லூர் முதலான திருக்கோயில்களில் ஆண்டுதோறும் நிகழுதல் வழக்கம். இம்முறை நல்லூரில் தினமும் ஆயிரத்துக்கு மேலான அடியார்கள் சங்கற்பஞ் செய்து அருமையாக விரதம் அநுட்டித்தார்கள். அவர்கள் பெருவிருப்பத்தோடும் பக்தியோடும் பாராயணம் செய்யும் கந்த சஷ்டி கவசம், கந்தரனுபூதி முதலான நூல்களை மில்க்வைற் தொழிலதிபர் ஆயிரக்கணக்கில் அன்பளிப்பாக அடியார்களுக்கு வழங்கி அகமிக மகிழ்ந்தார்கள்.

# அருள் விருந்து

(ஆதாரம் – தர்மசக்கரம்)

1. பணிவில்லாத தொண்டினால் பயனில்லை
2. சொன்ன சொல்லைக் காவாதவன் துரும்பு
3. பதைபதைப்பினால் எச்செயலும் நடைபெறாது
4. தெளிந்தமனம் சுவர்க்கம். குழம்பிய மனம் நரகம்
5. உள்ளம் தூயதானால் எதிலும் வெற்றிகிடைக்கும்
6. இருப்பதும் இறப்பதும் ஞானிக்கு ஒன்றே
7. நல்ல எண்ணங்கள் மனிதனை வளர்க்கின்றன
8. அமைதி என்பது ஒழுக்கத்தின் ஒரு விளைவு
9. பிறர் செய்யும் பிழை எமக்குப் பாடமாதல் வேண்டும்
10. வெற்றியிலும் பார்க்க முயற்சியே மேலானது
11. எதிர்காலம் எங்கள் கண்களுக்குத் தெரியாது
12. தன்குற்றத்தை ஒத்துக்கொள்பவன் மேலோனாவன்
13. யோகியானவர் மனத்தைத் திறமையாக ஆள்கிறார்
14. பணம் சம்பாதித்தல் வாழ்வின் குறிக்கோள் அல்ல
15. பழிக்குப்பழிவாங்குதல் பண்பாடாகாது
16. உள்ளத்தின் பிழையே சொல்லின் பிழையாகிறது
17. உயிர்களை நேசித்தல் இறையன்புக்கு நிகர்
18. தற்பெருமையற்றவனிடம் தெய்விகம் தழைக்கும்
19. இறைவனை வணங்க யாரிடமும் அனுமதி தேவையில்லை.
20. உலகத்தில் நல்லவைகளுக்கு எல்லையில்லை

# Good Life

1. Do not cheat anybody
2. Always depend on God
3. Evil company is dangerous
4. Helping others is a virtue
5. Nib anger in the bud
6. Speak sweetly and softly
7. Always control your tongue
8. Return good for evil
9. Kindness brings its own reward
10. Trust in God and do the right

## உங்களுக்குத் தெரியுமா? விடைகள்

1. புல்டோசர். 2. ஆபிரிக்க திருன்ஸ்வால். 3. போர்த்துக்கீஸ். 4. மார்ஸ். 5. நெப்சூண். 6. கராட்டி. 7. நெல். 8. பிளுங். 9. மார்க்ஸ் 10. சிரியா, லெபனன், இஸ்றேல். 11. காதே. 12. நிப்பன். 13. ஸ்ரொக்ஹோம். 14. டென்மார்க் தேசத்தவர். 15. வடகடல். 16. இத்தாலி, 17. கிறீஸ் 18. சூரிய சந்திரர் இழுப்புச்சக்தி. 19. இரண்டுமணி. 20. றிக்ஸ்டாக்.

★ நமது நல்லொழுக்கம் எதிரியையும் நண்பனுக்குகிறது ★



## பாரதியாரும் யாழ்ப்பாணமும்

மகாகவிசுப்பிரமணிய பாரதியாரின் நூருண்டு விழாக் கொண்டாட்டத்தில் யாழ்ப்பாணத்தின் பெருமையையும் நினைவு கூரவேண்டியுள்ளது. தமிழ் வழங்கும் பிரதேசங்களில் தமிழ் நாட்டுக்கு அடுத்தபடியாகப் பெரும் புகழ் பெற்ற இலங்கையில் அந்நாட்டுக்கு அணித்தாகவுள்ளது யாழ்ப்பாணம், அது நிற்க.

சுப்பிரமணிய பாரதியாரின் ஞானகுரு யாழ்ப்பாணச் சாமி என்பதைப் பாரதியாரே தமது பாடல்களில் போற்றியுள்ளார். தாமறிந்த ஞானிகள் வரிசையில் யாழ்ப்பாணத்துச் சாமியை நன்ருகத்துதித்துள்ளார். இப்பெருமை ஒருபுறமாக, பாரதியாரின் பாடல்களைப் பண்டிதவுலகம் பாராட்டத்தயங்கிய காலத்தில் முதலில் நயந்து மேடைகளில் நயங்கூறிப் பாராட்டியவர் அண்ணமலைப் பல்கலைக்கழகத்து அந்நாட்பேராசிரியர் சுவாமி விபுலானந்தராவர். அது நிற்க.

செந்தமிழ்ச் செம்மல்கள் என்னும் நூல் எழுதிய பெருமைக்குரிய தமிழ்நாட்டுப் பண்டித நடராசன் எம். ஏ. பி. ஓ. எல். அவர்கள் சோமசுந்தர பாரதியாரைப் பற்றி எழுதும்போது சுவையான சம்பவங்களை யாத்துள்ளார். சோமசுந்தரனுர் பாரதிப்பட்டம் பெற்ற வைபவத்தைக் கூறும்போது, நெல்லையில் கல்விபயின்று வந்த அவருக்குப் பாரதிப்பட்டம் வழங்கியவர் யாழ்ப்பாணத்து அறிஞர் ஒருவர் என்றும், அப்பட்டம் வழங்கிய அன்றே சுப்பிரமணியருக்கும் பாரதி என்னும் பட்டத்தை வழங்கினுர் என்றும் குறிப்பிடுவர்.

## முத்திநெறி

இந்து நாகரிகம் சம்பந்தமாக எமக்குக் கிடைத்துள்ள பெரிய நூல்கள் யாவும் சமயசம்பந்தமாகவும் தத்துவம் சம்பந்தமாகவும் உள்ளன. அவற்றுள் சமயமும் தத்துவமும் ஒன்ருகவே பேசப் பெறுகின்றன. அவை மனிதப் பிறவியின் நோக்கம் என்ன என்பதையே வெவ்வேறு கோணங்களில் ஆராய்கின்றன. மகான்கள் நீண்டகாலம் தங்கள் பரிசுத்தமான மனசில் சிந்தித்துச் சிந்தித்துச் செய்த ஆராய்ச்சியின் பெறுபேறு முடிந்த நிலையான முத்தியை அடைதல் என்பதேயாம். வாழ்வின் பயன் முத்தியடைதலே என்பதை இலகுவான தமிழில் இரண்டாம் வகுப்பு நூலில் ஆறுமுகநாவலர் இனிமையாக எழுதியுள்ளார். "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்."

## அன்னை இந்திராவின் அபிலாசை

இருபது அம்சம் என்னும் பெயரிலமைந்த அபிவிருத்தித்திட்டம், பாரதநாட்டு மக்கள் அனைவருக்கும் பொருத்தமானது, அமைவானது, பங்குபற்றற்குரியது, பயன்பெறவுள்ளது. ஆட்சியாளர் ஆளப்படுவோர் என்ற பேதமோ, வடக்கு தெற்கு என்ற பிரிவுகளோ இல்லாமல் சகலருக்கும் உரியது, இதயபூர்வமாக ஆதரவளிக்க வேண்டியது. மக்களின் மனப்பூர்வமான ஒத்துழைப்பை வேண்டிநின்ற அவரின் அபிலாசையை நிறைவேற்ற வேண்டியது பாரதநாட்டு மக்களின் தலையாய கடமையாகும் எனக்கண்டு, மாநிலங்கள், பிரதேசங்கள், நகரங்கள், கிராமங்கள் யாவும் மனப்பூர்வமாக ஒத்துழைக்க உடன்பட்டிருப்பதாக அறியக் கிடக்கிறது.

## இந்திரா நினைவு

முற்காலத்தில் இந்திரப்பிரஸ்தம், இந்திரவிழா முதலிய பெயர்கள் பாரதநாடெங்கும் பரந்து ஒலித்தன. இந்திர விழா தமிழ் நாட்டில் கோலாகலமாக நடைபெற்று வந்தது. பசியும் பஞ்சமும் போயகன்று வசியும் வளமும் நிலவுதல் வேண்டி, மன்னர் முதல் குடிமக்கள் வரை, அரண்மனை முதல் பட்டி தொட்டியெங்கும் விழாப்பொலிவும், விழா வொலியும் நிலவின. கட்புல செவிப்புல விருந்துகள் தமிழ் மக்கள் கண்ட பண்டைக் காலப் பொதுமக்கள் கல்வி முறையுமாகும்.

## அதிஷ்டசாலி யாராகலாம்?

பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்குப் பிரியமான உலக சமாதானத்தின் பேரில் அவர் நினைவாகப் பாரதநாடு வழங்கப்போகும் சமாதானப் பரிசின் முதல் பேற்றினைப் பெறப்போகின்றவர் யாராக இருக்கலாம்? அந்தப்பெரியவரைப் பெற்றெடுத்த நாடு எதுவாகலாம்.

## திருச்சிலம்போசை

நடராசப் பெருமானின் திருவடிச்சிலம்பு ஓசை தருவதைப் புறச்சமயத்தவரான இளங்கோவடிகளே சிறப்பித்துப் பாடுகிருர். திருமுறைகளில் இறைவனின் சிலம்போசை ஒலிக்குமிடங்கள் பல. சுந்தரமூர்த்திநாயனுர் காலத்தில் சேரநாட்டையரசாண்ட சேரமான் பெருமாள் தமது நாளாந்த சிவபூசையின்போது, சிலம்போசை கேட்டு உளம்பூரித்து வந்தார்.

யோகத்தின் போது நிராதார யோகநிலை ஒன்று. யோகியர் உடம்பு, கரணம் முதலியவற்றின் நீர்மை ஒடுங்குவதற்கு இந்த யோகத்தைச் செய்யும்போது, பேரறிவால் அறிவு இச்சை செயல் யாவும் நீங்கவே சிலம்போசை கேட்கும். ஓசைவழி திருவடியைக் கண்டு இறைவனையும் காணலாம். இறைவனேடு இயைவிப்பது யோகம்.

"ஓசையெலாம் அற்ருல் ஒலிக்கும் திருச்சிலம்பின்
ஓசை வழியே சென்று ஒத்தொடுங்கில்-ஓசையினின் அந்தத்
தான் அத்தான் அரிவையுடன் அம்பலத்தே வந்தொத்
தான் அத்தான் மகிழ்ந்து"

★ பணிவிடைக்கும் பரநாட்டத்துக்கும் அளவில்லை ★

## நீதிநூற்கொத்து புதிய பதிப்பு வெளியீடு

மில்க்வைற் வெளியீடாக உலாவந்த நீதிநூற்கொத்தின் பிரதிகள் யாவும் விநியோகமானபின், வளர்ந்து வரும் சிறுர்களின் நாளாந்த தேவை கருதி, அத்தொகுப்பின் அடுத்த வெளியீடு அழகாகப் பிரசுரமாகியது. இந்தப் பதிப்பின் முதற்பிரதிகளை இலவசமாகப் பெறும் வாய்ப்பு,

இராமநாதன் கல்லூரி மாணக்கியர், ஆசிரியைகள் சார்பில், கல்லூரி அதிபர் திருவாட்டி சச்சிதானந்தம் அவர்களுக்கே உரியதாயிற்று. சிட்டாசாரத்துறையில் இந்துநாகரிகப் பரம்பலுக்கும் பாதுகாப்புக்கும் ஔவை யாரின் ஆத்திசூடி முதலான நீதிகள் பாரம்பரியமாகப் பயன் தந்து வந்தன என்பது எல்லோரும் நன்கறிந்ததே. திருவாட்டி சச்சிதானந்தம் நல்ல முறையில் பிள்ளைகளை உருவாக்கி வரும் வழியில் சேர் இராமநாதன் அவர்களின் நினைவாக இத்தொகுப்பு பெரும் பயன் தருவதாக. நீதி நிலைப்பதாக.

## நந்தி ஒரு பக்குவான்மா

பிற்காலப் பல்லவர் பட்டயங்கள் எல்லாவற்றிலும் நந்தி முத்திரை காணப்படுகிறது. வைணவ சமயத்தைத் தழுவிய நிருபதுங்கவர்மனும் நந்தி முத்திரையை நீக்கவில்லை. சில இடங்களில் நந்திக்குமேல் சிவலிங்கமும் காணப்படுகிறதால் அக்காலத்தில் சைவசமயம் நாட்டுச் சமயமாய் நிலவியதென்பது உறுதி. பல்லவர் நாணயங்களிலும் நந்தி முத்திரை பொறிக்கப்பட்டது.

பரமேஸ்வரன் என்னும் பல்லவன் சிறந்த சிவபக்தன் அவனுடைய கல்வெட்டுக்களிலொன்று சிவனை நினையாதவர் நரகத்துக்குப் போவார் என்று கூறுகிறது. இவன் உருத்திராக்கத்தைக்கொண்டு சிவலிங்க அமைப்பில் முடி செய்து தலையில் தரித்தான் என்பர். இவனே சிவபெருமானுக்கு முதன் முதலாகக் கருங்கற் கோயிலைக் கட்டியவன். இவன் மைந்தன் இராசசிம்மன் (கி. பி. 666 – 705) காஞ்சியில் பெரிய கோயில் கட்டியதோடு பெரிய கலாவிநோதனுயும் பணிபுரிந்தான். சுந்தரமூர்த்திநாயனுர் காலத்தில் அரசனுயிருந்த மூன்றும் நந்திவர்மன் ஆட்சியில் சைவமறுமலர்ச்சி உச்ச நிலையை அடைந்தது. அக்காலம் (கி. பி. 825 – 850) ஆகும்.

## மில்க்வைற் தொழிலதிபரின் திருக்குறள் பணி

யாழ் மாவட்டமெங்கும் போக்குவரத்துச் செய்யும் பஸ் வண்டிகளில் பரவலாகத் திருக்குறள் பலகை தொங்குவதைக் கண்ட அன்பர் ஒருவர், மில்க்வைற் தொழிலதிபரின் சேவையை நேசன் என்னும் பத்திரிகையில் மிகவும் பாராட்டி எழுதியுள்ளார். திருக்குறளின் பெருமையையும் சிறப்பையும் பிரயாணிகள் பரவலாக அறிந்து கொள்வதற்கு மில்க்வைற் தொழிலதிபரின் உபகரிப்பு பெரிய வாய்ப்பாகவும் வரப்பிரசாதமாகவும் உள்ளது என்று எழுதியுள்ளார்.

## லேடி முத்துக்குமாரசுவாமி அம்மையார்

எலிசபெத் கிளே பீ பீ என்னும் பெயர் பெற்ற ஆங்கிலப் பெண்மணியாகிய இவர் சேர் முத்துக்குமார சுவாமி அவர்களைத் தலைவராகப் பெற்ற பின், தம்முடைய நாட்டுக்குரிய நாகரிகத்தையும் பழக்கவழக்கங்களையும் விட்டுத் தமிழ் நாகரிகத்தையும் சைவ கலாசாரத்தையும் மேற்கொண்டு ஒழுகிவந்தார்.

கென்ற் பிரதேசத்து உயர் குடும்பத்தைச் சேர்ந்த இவர் லண்டன் சர்வகலாசாலைப் பட்டதாரியாய் இருந்தமையால் பண்பட்ட நெஞ்சத்தினராய், அன்புடைமை, பொறுமை, கடமை பிறழாமை, விருந்தோம்பல், அடக்கம், செய்ந்நன்றி மறவாமை, பதிபக்தி முதலிய உத்தம குணங்கள் ஒருங்கே வாய்க்கப் பெற்றிருந்தார். இவர் கீழைத் தேயத்து இந்துப் பண்பாட்டை மேற்குத் தேயத்துப் பெண்களுக்கு எடுத்துக் காட்டுபவராய் வழி காட்டியாய் வாழ்ந்து காட்டினுர்.

இவரின் வாழ்க்கை முறையையும் குண நலன்களையும் பழக்கவழக்கங்களையும் கண்டோர் இவரை வைதிக குடும்பத்திற் பிறந்தவராகவே கருதினர்.

## நூற்றெட்டாம் இதழ்

திருவருளும் குருவருளும் துணைபுரிய, மில்க்வைற் தொழிலதிபரின் திரவிய சகாயத்தால் இன்று அவருடைய தொழிலகத்தின் சார்பாக மாதந்தோறும் தவருமல் வெளிவரும் மில்க்வைற் செய்தி தனது நூற்றெட்டாம் இதழை மலர்த்துவதில் ஒரு பெருமையடைகிறது.

இது தனியார் ஒருவரின் தொழிலகத்துக்குத் தம் பட்டம் அடிப்பதாகவோ, ஊதுகுழலாகவோ அமைந்த போதிலும், தொழிலகத்தின் விளம்பரம் ஒன்றே ஒன்று பின்புறத்தில் ஒரு மூலையில் மாத்திரம் இடம் பெறுகிறது. எனவே இதனை விளம்பரப்பத்திரிகை எனக் கொள்ளலாகாது என்று வித்தகர்கள் பலர் கொண்டாடுகிறுர்கள்.

ஒவ்வொரு மாதமும் பலவிடங்களிலிருந்தும் மில்க்வைற் செய்தியை வெகுவாகப் பாராட்டிக் கடிதங்கள் வருகின்றன. அநுமான் தான்பெற்ற வெற்றியை விளம்ப வெட்கி அதை வெளியிடாத அமைவில் நாங்களும் எங்களுக்கு வந்து சேருகின்ற பாராட்டுக்களை வெளிவிடவில்லை. அன்பர்கள் இதயபூர்வமாக எழுதியமைக்கு எங்கள் இதயபூர்வமான நன்றி. மில்க்வைற் செய்தி தொடர்ந்து வெளிவரும்.

## Sat Guru, the true Master

The true master who lived among us for over ninety years and went to mahasamadhi by leaving his physical body in 1964 lit the lamps of wisdom of all his devotees and made the spiritual flood of the country flow. The true master is known all over the world by his great sayings called Nat Chinthanai in Tamil.

★ ஒழுக்கமில்லாதவனுக்கு வழிபாடு பயன் தராது ★

# மன்னிப்புக் கோருகிறோம்

*[சென்ற மாதச் செய்தியில் (இதழ் 107) வெளியான உங்களுக்குத் தெரியுமா? என்ற பகுதிக்குரிய விடைகள் தவறுதலாக விடுபட்டுப்போயின. அன்பர்கள் பலர் எழுத்துமூலம் அவ்விடைகளைச் சிரமப்பட்டு எடுத்துக் கொண்டார்கள். விண்ணப்பிக்காத அன்பர்களுக்காக இங்கே விடைகளைத் தருவதோடு வினாக்களையும் மீண்டும் பிரசுரிக்கின்றோம் குற்றத்தை மன்னித்துக்கொள்ளவும் - நன்றி.]*

## உங்களுக்குத் தெரியுமா?

1. ஆயிரத்துக்கு அதிகமான கண்டுபிடிப்புகளுக்கு உரியவர்?
2. முத்திரையில் பொறிக்கப் பெற்ற நீக்குரோ?
3. அரிஷ்ரோட்டில் மன்னரிடம் பெற்ற வெகுமதி?
4. சேர்ச்சில் பிறந்த அரண்மனையின் பெயர்?
5. விலடிமிர் இலிச் உலியனவ் என்பவர் யாவர்?
6. புகழ்பெற்ற எகிப்திய வைத்தியர்?
7. உருளைக்கிழங்கில் பள்ளம் உண்டாவது ஏன்?
8. தேங்காய் முளைகொள்ளும் இடம்?
9. மூவாயிரம் விழுதுள்ள ஆலமரம் உள்ள இடம்?
10. ஒரு புசல் கோதுமையின் நிறை?
11. முப்பது கோடி றப்பர் மரமுள்ள நாடு?
12. வனிலா விதை உண்டான நாடு?
13. தக்காளி பழமா காய்கறியா?
14. உலக நிலப்பரப்பில் காடுகள் எவ்வளவு?
15. சோயா அவரை முதலில் உண்டான நாடு?
16. ''அப்படியே ஆகுக'' என்னும் ''ஆமென்'' என்ன மொழி?
17. லண்டனில் பிரதான விமான நிலையம்?
18. சிந்து நதி கலக்கும் கடல்?
19. எகிப்திய மன்னருக்கு வழங்கிய பெயர்?
20. பள்ளி மாணவன் எனப்பட்ட பிரதம மந்திரி?
21. மெக்கா, மெடினா நகரங்கள் உள்ள நாடு?
22. சவர்க்காரச் சோடாவின் இயற் பெயர்?
23. ஐரோப்பா, ஆசியா கண்டங்களுக்கிடையில் உள்ள மலை?
24. ஸ்ருவாட் தீவு எங்கேயுள்ளது?
25. வெனிஸ் நகரை நினைவுபடுத்தும் நாடு?

### விடைகள்

1. தோமாஸ் அல்வா எடிசன் 2. புக்கர்
3. நாற்பது கோடி டொலர் பெறுமதி 4. பிளென்ஹிம்
5. லெனின் 6. இம்ஹொரெப் 7. மழையதிகமானால்
8. பெரிய கண் 9. கற்கத்தா 10. அறுபது இறாத்தல்
11. பிறேசில் 12. மத்திய அமெரிக்கா 13. பழம்
14. நான்கில் ஒரு பாகம் 15. சீனா 16. ஹீப்றூ
17. ஹெத்றோ 18. அரபிக் கடல் 19. கெடிவ்
20. இளைய பிற் (பிரித்தானியாவில் 1783)
21. சவூதிஅரேபியா 22. சோடியம் ஹைட்றேக் சைட்
23. யூரல் 1500 மைல் நீளம் 24. நியூசிலந்து
25. வெனிசூலா

# வேதரிஷிகளின் கவிதை

இந்துநாகரிகத்திற்குள்ளே ஒரு விசேஷ சக்தியிருக்கிறது. எகிப்து, அசிரியா முதலிய நாடுகளின் தோற்ற ஒடுக்கங்களை இந்து நாகரிகம் பார்த்துக் கொண்டிருந்தது. இன்றும் இளமையுடன் நிலவுகிறது. இனி எதிர்காலத்திலும் அழியமாட்டாத இயல்பு கொண்டுள்ளது.

என்றும் அழிவில்லாத இந்து நாகரிகமான கற்பக விருட்சத்திற்கு ஆதியிலே விதையூன்றியவர்கள் வேத ரிஷிகள். வேதகாலத்து ரிஷிகள் உள்ளத் தெளிவால் மந்திரங்களைக் கண்டனர். மந்திர திருஷ்டாக்கள் ஆனவர்கள். அவர்களின் மந்திரங்களுக்குத் தேவர் வசப்படுவர். ''எதனை நினைக்கிறாயோ அதுவேயாகிறாய்'' என்பது யத்பாவம் தத்பவதி என்பதின் பொருள் நினைப்பு நன்றாக இருக்கவேண்டும்.

# இருபாலை கோப்பாய்

யாழ்ப்பாணத்து இருபாலை கோப்பாய் என்னும் இரு அயற் கிராமங்கள் வரலாற்றுப் புகழ்பெற்ற பேறூர்கள். சேனாதிராய முதலியார் சபாபதி நாவலர், வித்தகம் கந்தையாபிள்ளை முதலாய பெரியவர்களைத் தந்த ஊர்கள் சமூகத் தொண்டர், அரசியல் தலைவர்கள், அறிவாளிகள் ஆசிரியர்கள் பலரையும் அவ்வப்போது தந்துள்ளன.

சேர் இராமநாதன் பரமேஸ்வராக் கல்லூரியைக் கட்டுவதற்கு விரும்பிய இருபாலை நிலத்திலேயே இன்று ஆசிரிய கலாசாலை அமைந்துள்ளது. காரைநகர் அருணாசலப் பெரியார் ஆசிரிய கலாசாலை அமைக்க அடியெடுத்து வைத்ததும் கோப்பாயிலேயாகும்.

இருபாலை கோப்பாய் என்னும் இரு ஊர்களும் 1700ஆம் ஆண்டு முதல் 1950ஆம் ஆண்டு வரையும் எவ்வாறு நிலவின என்னும் ஆராய்வைக் கொழும்பு சைவப் பெரியார் சட்டத்தரணி சிவசுப்பிரமணியம் அவர்கள் வேண்டுகோளின் வண்ணம் கல்வி வெளியீட்டுத் திணைக்கள முன்னாள் உதவி ஆணையாளர் அ. வி. மயில்வாகனம் அவர்கள் அரிதின் ஆராய்ந்து வருகின்றார்.

இவ்வாராய்ச்சி முற்றுப்பெறுமாயின் சைவப் பேரிலக்கியங்கள் படைத்த செம்மல்கள் பலரின் வரலாறுகள் வெளிவருதலோடு, பலவாய உண்மைச் சம்பவங்களும் வெளிவரும். ஏறக்குறைய 350 ஆண்டுக் காலத்துச் சைவ நாகரிகமும் எல்லோருக்கும் அறிமுகமாகும்.

சேனாதிராய முதலியார் முதல் தென்கோவைக் கந்தையனார் வரையுள்ள வரலாற்றில் நாயகமணியாயுள்ள ஆறுமுகநாவலர், சேனாதிராய முதலியாரின் மாணவனாவர். தென்கோவையார் வித்தகத்தில் விபரித்த சுத்தாத்துவித சைவசித்தாந்த முத்தித்திறனும், அதுவே பரமுத்தி என்பதும் பேசப்பெறும். இவையாவும் நூல் வடிவாய் வரும்போது சைவத்தமிழருக்குப் பெரிய வரப்பிரசாதமாயமையும்.

தூய்மை புறக்காவலைக் கோரி நிற்பதில்லை.

— மகாத்மா காந்தி

★ சிந்தனையற்ற அறிவு பிரயோசனமற்றது ★

# Learn your English

**Give one word for the group of words:-**

1. Part of the sea reaching into the land
2. The kind of weather year after year
3. Land so dry that only bushes grow
4. A dry time when no rain fall
5. A part of an ocean that reaches into the land
6. A body of land surrounded by water
7. A body of water surrounded by land
8. Melted rock which pours from a volcano
9. A natural resource taken from the earth
10. A high raised part of the earth
11. A very high big raised part of the earth
12. A body of land that has water on three sides
13. Water that flows one way
14. A large body of salt water
15. A very large body of salt water
16. A narrow body of water that connects two bodies of water.

1. bay 2. climate 3. desert 4. drought
5. gulf 6. island 7. lake 8. lava 9. mineral
10. hill 11. mountain 12. peninsula 13. river
14. sea 15. ocean 16. strait

## சந்தியாவந்தனம் ஏன்?

சூரியனை அசுரர்கள் எதிர்க்கிறார்கள். அவர்களின் எதிர்ப்பின் வலிமையைக் கெடுப்பதற்குப் பூவுலகத்தவர்கள் சந்தியாவந்தனஞ் செய்கிறார்கள். சாப்பிடுவதை விட்டாலும் சந்தியாவந்தனத்தை விடலாகாது. சந்தியாவந்தனம் காலையிலும் மாலையிலும் கட்டாயமாகச் செய்தல் வேண்டும். அதுபெரிய கடமை. சிலர் காலை, நண்பகல், மாலை ஆகிய மூவேளைகளிலும் செய்வார்கள். மூவேளைகளையும் காணாமுன், கோணாமுன், கண்டு என்று வழங்குவர். காலையில் சூரியன் உதயமாவதன் முன்பும், நண்பகல் உச்சிப்பொழுதிலும், மாலையில் சூரியன் மறையமுன்னும் சந்தியாவந்தனஞ் செய்தல் முறையாகும்.

எல்லாக் கருமங்களுக்கும் எல்லா உபாசனைகளுக்கும் எல்லா மந்திரங்களுக்கும் ஆணிவேர் போன்றிருப்பது சந்தியாவந்தனம். சந்தியாவந்தனம் செய்யப்பழகியவன் இரண்டாம் பிறப்பு என்னும் மறுபிறப்பை அடைகிறான். பிராமணருக்கு விதிக்கப்பட்ட உபநயநம் என்னும் பூணூல் இரண்டாவது கண் எனப்படும். அது ஞானக்கண். சந்தியாவந்தனம் செய்யும்போது, உடலுறுப்புக்களை மந்திர பூர்வமாகத் தொடும்போது, அவை ஆற்றல் பெறுகின்றன. சைவசமயத்தவர் குறைந்தது சமய தீட்சை என்னும் பிரவேச தீட்சையையாவது பெற்று ஆறுமுக நாவலரின் நித்திய கருமவிதியைப் பின்பற்றுவோமாக.


# நீம் சோப்

**NEEM TOILET SOAP**




**இயற்கை வாழ்வே சிறந்த வாழ்வு**

**நீம் சோப்**

நீராடும்போது உபயோகிக்கத் தயாரிக்கப்பட்டது
சுத்தமான வேப்பெண்ணெய் கலந்து
செய்யப்பட்டதால்
தேக ஆரோக்கியத்துக்கு உகந்தது.

**நீம் சோப்**

தற்பொழுது
நவீன இயந்திர சாதனங்கள் மூலம்
புதிய மெருகுடன் நறுமணங்கொண்டதாக
தயாரிக்கப்பட்டு விற்பனையாகிறது.
பாவித்துப் பயனடையுங்கள்.

2 நீம் சோப் மேலுறைகளைக் கொடுத்து ஒரு அழகிய இந்திரா காந்தி ஸ்ரிக்கரைப் பெற்றுக்கொள்ளுங்கள்


## மாமிசம் உண்பதனல் பாவம்

கொன்றவன், வெட்டியவன், விற்றவன், வாங்கியவன், சமைத்தவன், உண்டவன் ஆகிய அறுவரும் அசல் குற்றவாளிகளே, பாவிகளே, தண்டனைக்குரியவர்களே.

"கொன்றவன், குறைத்தவன், கொணர்ந்து விற்றவன்,
ஒன்றிய பொருள்கொடுத்து வந்து கொண்டவன்,
அன்றடு மடையன், நாவிற் பெய்தவன்
என்றிவர் அறுவரும் நரகில் வீழ்வரே.

## ஹாவாய் மாநிலம்

அமெரிக்காவின் ஐம்பதாம் மாநிலம் ஹாவாய் என்னும் தீவுக் கூட்டம். எண் பெரு தீவுகளைக் கொண்டதால் எண் கோடுகள் கொடியிற் கொண்ட இந்த அரசு இன்று சைவம் நிலவும் பெருமைவாய்ந்துள்ளது. யாழ்ப்பாணத்து சிவயோக சுவாமிகளின் சீடர் சுப்பிரமுனியர் சைவம் ஒலிக்கச் செய்து வருகிறார்.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெறிப்புரவலர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-12-84.